இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதியங்கள் மற்றும் உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 07 ஆம் பிரிவின்படி, பல்கலைக்கழகத்தின் செலவினமாக அடையாளம் காணப்பட முடியாத, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி (STHRD) செயற்திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்திற்காகச் செலவிடப்பட்ட 60,825,232 பெறுமதியான மீண்டெழும் செலவுகள், பல்கலைக்கழகத்தின் செலவுகளாக அடையாளம் காணப்பட்டிருந்தன. மேலும், இத்திட்டத்தின்	STHRD செயற்திட்டத்தின் மீண்டெழும் செலவுகளுக்காகச் செலவிடப்பட்ட அதே பெறுமதி வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால், பல்கலைக்கழகத்தின் செலவுகள் குறையவில்லை. செயற்திட்டத்துடன் தொடர்புடைய மீண்டுவரும் செலவுகள் ரூபா 60,825,232 எனக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்தக் குறித்த மதிப்பிற்குள் அத்திட்டத்தில் இருந்த சம்பளங்கள் மற்றும் ஏனைய செலவுகள் உள்ளடங்கியிருந்தமை கணக்காய்வு ஐயவினாவின் மூலம் அடையாளம் காணப்பட்டது. அதைத்	நிறுவனத்திற்கு நேரடியாகத் தொடர்பில்லாத வருமானங்கள் மற்றும் செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதுடன் பொருத்தமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் தேவைக்கேற்ப சரியாகத் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

	மூலம் பல்கலைக்கழகத்திற்கு மானியங்களாகப் பெறப்படாத ரூபா 18,332,555 தொகையும் பல்கலைக்கழகத்தின் மானியங்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது.	திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	
(ஆ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 07 ஆம் பிரிவின்படி, அறிக்கையிடல் காலப்பகுதியில் நிதிச் செயற்பாட்டறிக்கையில் ஒரு செலவினமாகக் கருதப்பட வேண்டிய ரூபா 1,288,125 கூட்டுத்தொகையை நேரடியாகத் தொடர்புடைய நிதியக் கணக்குகளில் வரவு வைத்ததன் காரணமாக, மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாட்டறிக்கையில் உள்ள மிகை அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நிதியமானது சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் மூலம் உருவாக்கப்பட்டது என்றும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினங்களுக்கு பொது திறைசேரயின் நிதியைப் பயன்படுத்த முடியாததால், இந்த நிதியைப் பயன்படுத்தி உரிய அனுமதிகளுக்கு உட்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், எதிர்காலத்தில் செலவினங்களை நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்காததால், இலாபம் அதிகமாகக் காட்டப்படுகிறது. எனவே, உரிய செலவினங்களை முறைப்படி நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சுயநிதி மூலம் ஈட்டப்பட்ட வருமானத்திலிருந்து செய்யப்படும் செலவுகள் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02		
(i)	காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ், கட்டிடங்களைக் கையகப்படுத்துவதற்காகவும் மற்றும் நீண்டகால முதலீடுகளுக்காகவும் முறையே ரூபா 5,947,064 தொகையை அதிகமாகவும் மற்றும் ரூபா 2,684,086 தொகையை குறைவாகவும் காசு வெளிப்பாய்ச்சலாக அடையாளம் காணப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களுடன், 2024 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2024 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	நிதிச் செயற்பாடுகளின் கீழ்	தேறிய காசுப் பெறுவனவுகள் தவறுதலாகப் காசு	திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும்போது,

	காட்டப்பட்டுள்ள, பிரயோக விஞ்ஞான பீடத்தின் தேசிய விஞ்ஞான நிதியத்தின் (NSF) மானியங்களில் இருந்து பெறப்பட்ட தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா 1,839,375 ஆக இருந்தபோதிலும், அது தேறிய காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக, தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா 3,678,750 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்தக் குறைபாட்டைத் திருத்தவும், எதிர்காலத்தில் காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்களைச் சரியாக அடையாளம் கண்டு அறிக்கையிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	முந்தைய ஆண்டுகளுக்கான சீராக்கங்களாக அடையாளம் காணப்பட்ட ரூபா 26,635,681 பெறுமதியான தொகை திரட்டப்பட்ட மீண்டெழும் நிதியத்திலிருந்து சீராக்கம் செய்யப்பட்டிருந்ததுடன், காசுப்பாய்ச்சல் கூற்றின் மீளாய்வாண்டின் மிகை தொகையைப் பணமாக மாற்றும்போது அந்த இலாபத்துடன் தொடர்பில்லாத குறித்த தொகையும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	கடந்த வருடங்களில் சீராக்கங்கள் தொடர்புடைய அட்டுறு/அறவிடப்பட வேண்டிய கணக்குகளிலிருந்து சரியாகத் திருத்தப்பட்டுள்ளதாகவும், அதன் தாக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடங்க வேண்டியபோதிலும், மிகைக்கான சீராக்கங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாத காரணத்தால் காசுப்பாய்ச்சல் கூற்றின் பெறுமதி சரியானது அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நியமத்தில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டலின்படி, காசுப்பாய்ச்சல் கூற்றைத் றிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 ஆம் பிரிவின்படி, முந்தைய ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட பிழைத் திருத்தங்கள் தொடர்பாக, தவறு நிகழ்ந்த	நியமத்தின் இலக்கம் 03 இன் 47 ஆம் பிரிவின்படி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நியமங்களுக்கு இணங்கச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	காலப்பகுதிக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் மீண்டும் வெளியிடப்பட வேண்டியிருந்தபோதிலும், பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.		
(உ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 28 ஆம் பிரிவின்படி, மூலதனமாக்கப்பட முடியாத ஒரு செலவினமாக இருக்க வேண்டிய, கட்டிடம் ஒன்றைக் கட்டும் பணிக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 202,941,475 பெறுமதியான தாமதக் கட்டணங்கள் 2024 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, கட்டிடத்தின் கிரயம் மற்றும் திரண்ட நிதியம் ஆகியன அத்தொகையால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. மேலும், மூலதனமாக்கப்பட்ட இந்தக் குறித்த தொகைக்காக, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 20,294,146 தேய்மானம் செய்யப்பட்டதன் காரணமாக, மீளாய்வாண்டின் மிகை மற்றும் திரண்ட நிதியம் ஆகியவை ரூபா 10,147,073 ஆல் குறைவாகவும், பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கு அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன.	மருத்துவ பீடத்தின் துணை மருத்துவக் கட்டிடத்தைக் நிர்மாணிக்கும் போது ஒப்பந்தக்காரர் கோரியுள்ள ரூபா 202,941,475 தொகையை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இற்கிணங்க திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	அதிகமாக மூலதனமாக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி மற்றும் பெறுமானத் ஒதுக்கீடுகள் இரண்டையும் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன், எதிர்காலத்தில் செலவினங்களைக் கணக்கிடும்போது, அவற்றை முறையாக வகைப்படுத்தி பின்னர் கணக்கு வைக்கப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பிரிவுக்கு முரணாக, நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்த முழு வருடத்திற்கும் தேய்மானம் செய்வதாகவும்,	பாரிய அளவிலான மற்றும் பல்வேறுபட்ட சொத்துக்களைக் கொள்வனவு செய்யும்போது, சொத்துக்கள் பயன்பாட்டிற்காகத் தயாரான நிலைக்கு வந்த பிறகு பெறுமானத் தேய்விடலை ஆரம்பிப்பது நடைமுறையில் கடினம் என்பதால், கணக்கீட்டுக்	எந்தச் சூழ்நிலையிலும் கணக்கீட்டுத் நியமங்களை மீறி கொள்கைகளை வகுத்துக்கொள்வதற்கு கணக்கீட்டுத் நியமங்கள் இடமளிக்கவில்லை. எனவே, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69

	சொத்துக்கள் நீக்கப்படும் வருடத்தில் தேய்மானம் செய்யாதிருப்பதாகவும் ஒரு கணக்கீட்டுக் கொள்கை அடையாளம் காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிக் கணக்காய்வுச் சோதனையில், மூலதனமாக்கப்பட்ட சில சொத்துக்களின் பெறுமானத் தேய்வு ரூபா 26,667,770 இனால் அதிகமாகக் கணக்கீடு செய்ததன் மூலம், அந்த ஆண்டின் மிகை மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகள் ஆகியவை முறையே அத்தொகையால் குறைவாகவும் மற்றும் அதிகமாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.	கொள்கைக்கு இணங்கச் செயற்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்குச் சலுகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஆம் பிரிவின்படி பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இற்கிணங்க, மீள்மதிப்பீட்டு பெறுமதியாக சொத்தின் நியாயமான பெறுமதி கவனத்தில் கொள்ளப்படாமல், பல்கலைக்கழகத்தால் காப்புறுதி நோக்கங்களுக்காகப் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, பிழையான முறையில் 2022 ஆம் ஆண்டில் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. இதன் மூலம் மீள்மதிப்பீட்டு இலாபமாக ரூபா 135,757,664 அடையாளம் காணப்பட்டு, அந்த மீள்மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகளும் மற்கொள்ளப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில், அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் முறையான மீள்மதிப்பீட்டு முறையைப் பின்பற்றி, சரியான பெறுமதியை கணக்குகளில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்காலத்தில் நிலையான சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும்போது, நியமங்களில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின்படி அதைச் செய்ய வேண்டும். அத்துடன், தற்போது நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டுள்ள வாகனங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி குறித்து மீண்டும் கருத்தில் கொண்டு, சரியான மீள்மதிப்பீட்டு முறைக்கு அமைய அனைத்து வாகனங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதியையும் மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்ய வேண்டும்.
(ஏ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19	கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும், 2024 ஆம்	நிதிக்கூற்றுக்களில் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடுகள்

இன் 85 மற்றும் 86 ஆம் பிரிவுகளின்படி, போதுமான எடுகோள்களை பயன்படுத்தாமல் ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்பட்டிருந்தன. மேலும், அதற்காகத் தேவைப்படும்போது ஒரு ஆயுட்கணித நிபுணரின் சேவையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருந்தும், அவ்வாறு செய்யப்படாமையால், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளபடியாக, ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ள ரூபா 833,662,211 ஆன மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.	ஆண்டில் அரச கணக்காய்வுத் நியம இலக்கம் 19 இற்கு செயற்பட வேண்டியிருந்ததால், பொதுவான சூத்திரப்படுத்தலுக்கான தரவுகளைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்பட்டதாகவும், வரும் வருடத்தில் ஒரு ஆயுட்கணித நிபுணரின் சேவையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஒரு முக்கியமான பெறுமதியை பிரதிநிதித்துவம் செய்வதால், மிகவும் பொருத்தமான ஒரு வழிமுறையைப் பயன்படுத்தி, சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டில் 31 சந்தர்ப்பங்களில் பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,296,486 பெறுமதியான செலவுகள், மீண்டும் அதே ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய செலவுகளாக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக, திரண்ட நிதியம் மற்றும் கடன் பட்டோரின் பெறுமதி ஆகியன முறையே அத்தொகையால் குறைவாகவும் மற்றும் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.	இது ஒரு இரட்டை கணக்கீடு என்பதால், எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	பொருண்மையான அபாயத்துடனான சந்தர்ப்பமாக இருப்பதால், இது குறித்து மேலதிகமாக கவனம் செலுத்தி, முறையான பகுப்பாய்வுக்குப் பின்னர் திருத்துவதற்கும், செலவுகளை மேற்கொள்ளும்போது தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையைப் பகுப்பாய்வு செய்து, அதை பலப்படுத்துவதற்கோ அல்லது புதிய வழிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	ஒரு தனியார் நிறுவனத்திடம் இருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக அடையாளம் காணப்பட்ட ரூபா 2,190,890 பெறுமதியான தொகை, கடந்த ஆண்டில் அந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ஒரு	கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்வதாகவும், எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இடம்பெற்றுள்ள தவறினை திருத்தம் செய்து, உண்மையாக அறவிடப்பட வேண்டிய மிகுதித் தொகையை நிதிக்கூற்றுக்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.

	பற்றுச்சீட்டிலிருந்து கழிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளபடியாக நிதிநிலை கூற்றில் பெற வேண்டிய பெறுமதியொன்றாக அடையாளம் காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அறவிடப்பட வேண்டிய பெறுமதி மற்றும் திரண்ட நிதியம் ஆகியன அத்தொகையால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.		
(இ)	தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையால் வெளியிடப்பட்ட 2025 பெப்ரவரி 07 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 05/2025 கொண்ட சுற்றறிக்கையின்படி, 2024 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளபடியாக, விவசாய விஞ்ஞான பீடத்துக்குச் சொந்தமான பண்ணையில் உள்ள கால்நடை இருப்பின் பெறுமதி (முயல்கள் தவிர) ரூபா 8,506,748 ஆக இருக்க வேண்டிய போதிலும், அந்த பெறுமதி ரூபா 13,550,100 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக, கால்நடை இருப்பின் பெறுமதியும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு ஆகியன ரூபா 5,043,352 ஆல் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.	இந்த அறிக்கை தயாரிக்கப்படும்போது சமீபத்திய சுற்றறிக்கை வெளியிடப்படாததால், முன்னர் இருந்த சுற்றறிக்கையின் அடிப்படையில் விலங்குகளின் உண்மையான பெறுமதி மதிப்பிடப்பட்டதாகவும், புதிய சுற்றறிக்கையின்படி செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	2024 ஆம் ஆண்டின் கால்நடை இருப்பைக் கணக்கிடுவதற்கு இந்தச் சுற்றறிக்கையைப் பயன்படுத்துமாறு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை அறிவித்திருந்தமையும், நிதிக்கூற்றுக்களை கணக்காய்வுக்கு வழங்குவதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலத்தை கருத்தில் கொள்ளும்போது சுற்றறிக்கையைப் பயன்படுத்தப் போதுமான கால அவகாசம் இருந்தமையும் காரணமாக, புதிய சுற்றறிக்கைக்கு இணங்க கால்நடை இருப்பைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடம் தொடர்பான திட்டமிடல் ஆலோசனைச் சேவைகளை வழங்கிய கம்பனியால் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின்படி, 2024 செப்தம்பர் 05 ஆம் திகதி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி அந்த நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய	மதியுரைச் சேவைகள் கம்பனியால் தொடர்ந்த வழக்கின்படி ரூபா 1,067,688 கழிக்கப்பட்டதாக இலங்கை வங்கியால் 2024.09.19 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளமையால், அதன் பிரதி கிடைத்தவுடன், நிதியதிகாரியால் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்களுக்கு தேவையான அடுத்தகட்ட	இந்த பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கும், எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிறுவனத்தின் அனைத்துத் துறைகளுக்கும் அறிவித்து தேவையான தகவல்களைப் பெறுவதற்கு ஒரு முறையான வழிமுறையை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட

	ரூபா 1,067,688 தொகையானது, பல்கலைக்கழகத்தின் வங்கி கணக்கிலிருந்து நேரடியாகக் கழிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய செலவினம் நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவு செய்யப்படவில்லை என்பதால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் காசுப் புத்தகத்தின் மீதி ஆகியவை அத்தொகையால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன.	நடவடிக்கைகளுக்காக, நிதிக்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பதிவாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கான சட்டப்பூர்வ அங்கீகாரம் கொண்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் அல்லது தொடர்புடைய செயற்திட்டம் பற்றிய தகவல்கள் கிடைக்காததால் கணக்குகளில் சீராக்கம் செய்ய முடியவில்லை என்றும், எதிர்காலத்தில் அதைப் பெற்ற பிறகு சரியாகச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கோப் (COPE) குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த பெறுமதியை பதிவேடுகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	வேண்டும்.
(உ)	பிரயோக விஞ்ஞான பீடத்தை நிர்மாணிக்கும் 1 ஆம் கட்டப் பணியில் ஆலோசனைச் சேவைகள் வழங்குவதில் ஏற்பட்ட ஒரு பிரச்சினை தொடர்பாக நிலவும் வழக்கில், ஒரு தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட ரூபா 6,625,106 தொகையானது, பல்கலைக்கழகத்தின் வங்கி கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும், அது குறித்து நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வாளருடன் இணங்குவதாகவும், திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இதற்குரிய சரியான பெறுமதியை அடையாளம் கண்ட பிறகு, அதை நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	பல்கலைக்கழகத்தினால் 2024 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவிற்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தை ஒதுக்குவதற்காக ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட ரூபா 500,000 தொகையானது, பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தபடி திரும்பச் செலுத்தப்படாத தொகையாக	பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தை ஒதுக்குவதற்கான கட்டணங்கள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாவை ஏற்றுக்கொள்வதாகவும், எதிர்காலத்தில் அதைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஆண்டின் மிகை மற்றும் வைப்புத்தொகை ஆகியன நிதிக்கூற்றுக்களில் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருக்கும் தவறினை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	இருந்தபோதிலும், அந்த ஆண்டின் செலவினமாகக் கண்டறியப்படாமல் வைப்புத்தொகையின் பெறுமதியாக அடையாளம் காணப்பட்டிருந்தது. இதன் காரணமாக, அந்த ஆண்டின் மிகை மற்றும் வைப்புத்தொகை ஆகியன அத்தொகையால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன.		
(எ)	பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகக் கட்டிடம் நிர்மாணிக்கும் பணியில் ஏற்பட்ட விலை மாறுபாடுகளுக்காக 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டியதாக அடையாளம் காணப்பட்ட, இதுவரை செலுத்தப்படாத ரூபா 5,648,479 தொகைக்காக, நிதிக்கூற்றுக்களில் நிதி ஒதுக்கீடுகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	கணக்காய்வுக் ஐயவினாவை ஏற்றுக்கொள்வதாகவும், எதிர்காலத்தில் அதைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்த தவறை திருத்துவதற்கும், செலுத்தப்பட வேண்டிய திகதியும் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியையும் திட்டவட்டமாக அமையாவிட்டாலும், கட்டாயம் செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகளுக்காக ஒதுக்கீடுகளைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் ஆய்வுகூடங்களில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளபடியாக இருந்த ரூபா 4,877,088 பெறுமதியான இரசாயனப் பொருட்கள் இருப்பு (Chemicals & Glassware Stock) கணக்கு வைக்கப்படாது இருந்ததன் காரணமாக, ஆண்டின் மிகை மற்றும் இருப்பு ஆகியன அத்தொகையால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.	STHRD செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட இருப்பு குறித்த தகவல்கள் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டபோது சமர்ப்பிக்கப்படாததால், அது கணக்கீடு செய்யப்படுவது தவறவிடப்பட்டுள்ளது எனவும், கணக்காய்வு அவதானிப்பின் அடிப்படையில் அதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் தவறவிடப்பட்ட இந்த இருப்பை நிதிக்கூற்றுக்களில் சீராக்கவும், எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, பல்கலைக்கழகத்தின் பிரதான களஞ்சியங்கள், உப களஞ்சியங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் ஏனைய இடங்களில் ஆண்டு இறுதியில் உள்ள இருப்பைச் சரியாக ஆய்வு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஐ)	பல்கலைக்கழகத்தின் சுத்திகரிப்புச் சேவைக்காக 2024 திசெம்பர் மாதத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,747,570 பெறுமதியான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) தொகை கணக்கு	பொது நிர்வாகப் பிரிவால் அனுப்பப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட செலவினப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட 2024 திசெம்பர் மாதத்திற்கான செலுத்தப்பட வேண்டிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் VAT அற்ற தொகையே	எதிர்காலத்தில் செலவுகளுக்காக ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்போது, VAT உள்ள மொத்த செலவிற்கும் ஒதுக்கீடுகளைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதன் மூலம்,

வைக்கப்படாததன் காரணமாக, மீளாய்வாண்டின் மிகை மற்றும் கடன் வழங்குநர்கள் ஆகியோர் முறையே அத்தொகையால் அதிகமாகவும் மற்றும் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தனர்.	குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், சரியான உறுதிச்சீட்டு கிடைத்த பிறகு VAT சீராக்கப்பட்டு, உரிய நாள் குறிப்புப் பதிவுகள் இட்டு, தற்போது கொடுப்பனவகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மீளாய்வாண்டின் சரியான இலாபத்தை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

	விடயம்	நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி	தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி	வேறுபாடு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
		ரூபா	ரூபா	ரூபா		
(அ)	கடன் கொடுத்தோர் பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஊசாத்துணை பணியகத்திற்கு செலுத்த வேண்டிய செலவினம்	39,646,791	15,812,024	23,834,767	எதிர்காலத்தில் கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மீதி உறுதிப்படுத்தலுக்காகக் கோரப்பட்ட போதிலும் பதில் கிடைக்கவில்லை என்றும், ஆயினும் CECB நிறுவனத்தால் 2022.08.04 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதம் இதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்துடன் கலந்துரையாடி, அந்தக் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	அட்டுறு செலவினம் அசோசியேட்டட் நிவுஸ்பேப்பர்ஸ்	1,690,293	2,403,766	713,473	2024 ஆம் ஆண்டிற்கோ அல்லது அதற்கு முந்தைய	அசோஸியேட்டட் நிவுஸ்பேப்பர்ஸ் கம்பனியுடன் கலந்துரையாடி,

	கம்பனிக்கு செலுத்த வேண்டிய பெறுமதி				ஆண்டுகளுக்கோ உரிய அட்டுறுவாகியுள்ள உறுதிச்சீட்டுகள் குறித்து அந்த நிறுவனத்தில் விசாரித்து, திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அந்த கம்பனிக்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	இருப்பு மின்சார வழங்கலுக்காக இலங்கை மின்சார சபையில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பெறுமதி	2,105,500	3,312,500	1,207,000	கணக்குகள் பிரிவின் அறிக்கைகளின் படி, 2013 இற்கு முன்னரே தொடர்புடைய பேரேட்டுக் கணக்கின் நிலுவைத் தொகை முன்னோக்கிக் கொண்டு வரப்பட்டுள்ளது என்றும், தற்போதுள்ள ரூபா 2,105,500.00 பெறுமதியான நிலுவைத் தொகை 2022 ஆம் ஆண்டிலிருந்து இருந்து முன் கொண்டு வருகிறது என்றும், கணக்காய்வுக் ஐயவினாவுக்கு அமையக் கண்டறியப்பட்ட சீரற்ற தன்மை குறித்து கட்டுப்பாட்டுப் பிரிவின் ஊடாக மின்சார சபையிடமிருந்து தரவுகளைப் பெற்று உறுதிப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்	பதிலில் கொடுக்கப்பட்டுள்ளபடி, கட்டுப்பாட்டுப் பிரிவும் தொடர்புடைய நிறுவனங்களும் உடன் கலந்துரையாடி, சரியான வைப்புத்தொகை மதிப்பை (ஊழசசநஉவ னுநிழளவை ஏயடரந) உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

					தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	விஞ்ஞானம் மற்றும் தொழில்நும்ப மனிதவளங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் (STHRD) இன் கீழ் கிடைத்த கட்டிடத்தின் பெறுமதி	3,637,659,333	3,783,718,901	146,059,568	செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் (PMU) பல்கலைக்கழகத்திற்கு அதிகாரப்பூர்வமாகப் போதுமான தகவல்கள் வழங்கப்படாததால், 2024.12.31 ஆம் திகதிக்குரிய சரியான இறுதிக் கணக்குகளை பெற்றுக் கொண்ட பின்னர் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	செயற்திட்டத்தின் 2024.12.31 ஆம் திகதிக்கான இறுதிக் கணக்குகளைச் பரிசோதித்த பின்னர், கட்டிடங்களின் பெறுமதியை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

	விடயம்	தொகை (ரூபா)	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	15,346,456,151	(i) விரிவான பட்டோலைகள் (ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு	சொத்துக்கள் பதிவேடு தயாரித்து முடிக்கப்பட்ட பின்னர், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் கணக்கிலிருந்து நீக்கி, மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துகளுக்கு உரிய பட்டோலைகள் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டை துரிதமாகத் தயாரிப்பதன் மூலம், நிலையான சொத்துகளுக்கு உரிய உள்ளகக் கட்டுப்பாட்டை முறைப்படுத்த வேண்டும்.
(ஆ)	கடன் கொடுத்தோர்	10,741,198	(i) மீதி உறுதிப்படுத்தல்கள்	இந்த கடன் கொடுத்தோர் 2015 ஆம் ஆண்டிலிருந்து	கடன் கொடுத்தோர் தொடர்பாக ஒரு ஆழமான

(ii)	பற்றுச்சீட்டுகள்	முன்கொண்டுவரப்படுவதுடன், கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டபடி, அவை உண்மையாகவே இருக்கிறதா என்பதை எதிர்காலத்தில் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்கேற்ப சீராக்கல்கள் செய்து திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	பகுப்பாய்வை மேற்கொண்டு, தொடர்புடைய கடன் கொடுத்தோர் மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக் கொண்டு, கடன் கொடுத்தோர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தப் பின்னர், உண்மையான கடன் கொடுத்தோரை நிதிக்கூற்றுக்கள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிநிலை நிலைமைக் கூற்றில் மீணடெழும் தன்மையிலான அட்டுறுச் செலவுகளான ரூபா 243,687,493 தொகையில், 5 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள ரூபா 8,103,635 பெறுமதியான நிலுவையும், 2 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 5,455,221 பெறுமதியான தீர்க்கப்படாத நிலுவையும் காணப்பட்டன.	2015 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 243,687,493 நிலுவையைக் கொண்ட அட்டுறுச் செலவுக் கணக்கை மேலும் பரிசோதனை செய்தபோது, இந்த பெறுமதினுள் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்ட கொடுப்பனவுகள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றை திருத்தம் செய்து, நாட்குறிப்புப் பதிவுகளுடன் எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்த அட்டுறுச் செலவுகளில் உள்ள ஒவ்வொரு செலவு குறித்தும் ஒரு முறையான பகுப்பாய்வை மேற்கொண்டு, செலுத்தி முடிக்கப்பட்டவை என திட்டவட்டமாகத் இனங்காணப்பட்ட செலவினங்களை தெளிவாக அடையாளம் கண்டு தீர்க்கவும், செலுத்தி முடிக்கப்படாத அட்டுறுச் செலவுகளை அடையாளம் கண்டு தொடர்புடைய மீதிகளை உறுதிப்படுத்திய பின்னர் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதிநிலைமைக் கூற்றில் கடன் கொடுத்தோர் மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவுகள் என ரூபா 411,076,052 எனக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன்,	பதில் வழங்கப்படவில்லை.	இந்த கடன் கொடுத்தோர் மீதியில் உள்ள தனிப்பட்ட கடன் கொடுத்தோர் நிலுவைகள் குறித்து ஒரு முறையான பகுப்பாய்வை மேற்கொண்டு, செலுத்தி

அதில் 10 வருடங்களுக்கும் மேலாகப் பழையதான ரூபா 39,328,210 தொகையும், 01 வருடத்திற்கும் 10 வருடத்திற்கும் இடையில் உள்ள ரூபா 9,760,054 பெறுமதியான தீர்க்கப்படாத மீதிகளும் காணப்பட்டன.		முடிக்கப்பட்டவை என திட்டவட்டமாகத் இனங்காணப்பட்ட செலவினங்களைத் தெளிவாக அடையாளம் கண்டு தீர்க்கவும், செலுத்தி முடிக்கப்படாத கடன் கொடுத்தோர் நிலுவைகளை அடையாளம் கண்டு தொடர்புடைய நிலுவைகளை உறுதிப்படுத்திய பின்னர் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 முற்பணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம், வழங்கப்பட்ட கட்டுநிதியை தீர்ப்பதற்கு, கட்டுநிதி வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மேல் தாமதிக்கப்படக் கூடாது. இருப்பினும், 2017 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், ஆராய்ச்சி, மீண்டெழும், மற்றும் மூலதன பணிகளுக்காக 18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்த ரூபா 2,267,873 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படாமல் இருந்தன. மேலும், அதே பிரமாணத்தின் பிரகாரம், தொடர்புடைய பணி முடிவடைந்த 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். ஆனால், 2024 ஏப்ரல் மாதத்தில் கணக்காய்வினால் பரிசோதிக்கப்பட்ட 8 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட மொத்த ரூபா 643,200 பெறுமதியான முற்பணங்கள், பணி முடிவடைந்த 46 நாட்கள் முதல் 93 நாட்கள் வரை தாமதித்துத் தீர்க்கப்பட்டிருந்தன.	நானாவித முற்பணங்கள் (மீண்டெழும்) தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பாக நினைவூட்டல் கடிதங்களை நிதிக் கிளை அனுப்பியுள்ளது என்றும், நானாவித முற்பணங்கள் (மூலதனம்) வகையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தைத் (University of Moratuwa) தவிர ஏனைய முற்பணங்கள் தற்போது தீர்க்கப்பட்டுவிட்டன என்றும், தீர்க்கப்படாத ஆராய்ச்சி முற்பணங்களுக்காக பல தடவைகள் நினைவூட்டல் விடுக்கப்பட்டதாகவும், தொடர்புடைய உறுதிச்சீட்டு குறைபாடுகளுடன் நிதிக் கிளைக்கு வந்ததாகவும், அந்தக் குறைபாடுகளைச் சரிசெய்து மீண்டும் அனுப்புமாறு தொடர்புடைய தரப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்புடைய தரப்பினருக்குத் தெரிவித்து எதிர்காலத்தில் இதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	ஆண்டில் வழங்கப்பட்ட முற்பணங்கள் அதே ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன் தீர்க்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தொடர்புடைய பணி முடிவடைந்த 10 நாட்களுக்குள் வழங்கப்பட்ட உப கட்டுநிதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்படைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்கலைக்கழகத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்தில் உள்ள ஒருவருக்குச் சொந்தமான வீடொன்றை, மாதாந்தம் ரூபா 40,000 குத்தகைக்கு 2025 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு, பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதித் தேவைக்காகப் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 836 இன் பிரகாரம், விடயப் பொறுப்புள்ள அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஒன்பது (09) பீடங்களைச் சேர்ந்த சுமார் 9,500 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள் என்றும், தற்போது பல்கலைக்கழகத்தால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட வீடுகள் மற்றும் பல்கலைக்கழகத்திடம் உள்ள விடுதிகளில் சுமார் 5,000 மாணவர்களுக்கு மட்டுமே விடுதி வசதிகளை வழங்க முடிவதாகவும், பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிக் குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் வீடுகள் மற்றும் பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் வீடுகள் உட்படப் பல வீடுகளும் பல்கலைக்கழகத்தின் தேவைக்காக முன்னர் இருந்தே பெறப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்த கொடுக்கல் வாங்கல் குறித்து நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தவும், இத்தகைய ஒப்பந்தங்களைச் செய்யும்போது தொடர்புடைய அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவக் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(i) (இ) ஆம் பிரிவு	பல்கலைக்கழகத்தின் நிதி கட்டுப்பாட்டுக்காக ஒரு செயல்திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை உருவாக்கி, அதனைப் பராமரிப்பதாகக் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதியளிக்க வேண்டும்.	தற்போதுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை எதிர்காலத்தில் செயல்திறன் மிக்கதாகவும், முறையாகவும் நிறுவிப் பராமரிக்கவும், அவற்றின் எழுத்துப்பூர்வ	பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையைச் செயல்திறன் மிக்கதாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		மேலும், அந்தக் கட்டுப்பாட்டு முறையின் செயல்திறன் குறித்து காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கேற்ப அந்த முறையை செயல்திறனுடன் கொண்டு செல்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், மீளாய்வாண்டில் அத்தகைய ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	மீளாய்வுகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	நிதிப் பிரமாணம் 751 மற்றும் 756	உயர்கல்வியைத் துரிதப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம் (AHEAD) மூலம் 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை பல்கலைக்கழகத்திற்குக் வழங்கப்பட்டிருந்த மொத்த ரூபா 1,584,604,644 பெறுமதியான சொத்துகளும், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தித் திட்டம் (STHRD) மூலம் 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த மொத்த ரூபா 1,871,437,904 பெறுமதியான சொத்துகளும் தொடர்புடைய ஒழுங்குமுறைகளின்படி பதிவு செய்யப்படாததன் காரணமாக, அந்தச் சொத்துகள் குறித்து வருடாந்தப் பொருட்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படவில்லை	செயற்திட்டத்துடன் தொடர்புடைய கோவைகளின் மூலம் அனைத்துச் கிரயங்களுடனும் கூடிய பொருட்கள் பட்டியலை பதிவு செய்து எதிர்காலத்தில் அறிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்தக் கோப்புகள் வரும் ஆண்டில் பொருட்கள் மெய்மையாய்வுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சொத்துகள் தொடர்புடைய ஒழுங்குமுறைகளின்படி பதிவு செய்யப்பட்டு, அந்தச் சொத்துகள் தொடர்பாக வருடாந்தப் பொருட்கள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6 மற்றும் 7.8 ஆம் பந்திகள்				
		(i)	2000 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்றிருந்த 13 உத்தியோகத்தர்களிடமிருந்து, பிணை மீறியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 68,561,320 தொகையானது, கணக்காய்வுத் திகதியான 2025 ஜூன் 25 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாமல்இருந்தது.	நிறுவனக் கல்விப் பிரிவு மூலம் பிணை முறி முறிவுகளுக்கான அறவீடுகளையும், ஏனைய அனைத்து அறவீடுகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பிணை முறி மீறல்களால் ஏற்பட்ட நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
		(ii)	2015 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், சம்பளத்துடன் கூடிய கல்வி விடுமுறை பெற்று வெளிநாடு சென்ற 05 உத்தியோகத்தர்கள் மற்றும் உள்நாட்டு கல்வி விடுமுறை பெற்ற 03 உத்தியோகத்தர்கள் என மொத்தம் 08 பேர் தமது கல்விப் பணிகளை	கல்விப் பணிகளை நிறைவு செய்யாது மீண்டும் சேவைக்குத் திரும்பிய 08 உத்தியோகத்தர்களிடமிருந்து 2025.06.25 ஆம் திகதி உள்ளபடியாக ரூபா 62,069,887.55 அறவிடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய, பிணை முறி முறிவுகளால் ஏற்பட்ட நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

			முடித்துக் கொள்ளாமல் மீண்டும் சேவைக்குத் திரும்பியதன் காரணமாக, அறவிடப்பட வேண்டிய ரூபா 62,069,887 பெறுமதியான பிணை முறித் தொகையானது, கணக்காய்வுத் திகதியான 2025 ஜூன் 25 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாமல்இருந்தது.		
(ஈ)	04/2016 ஆம் இலக்க மற்றும் 2016 மார்ச் 01 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு				
		(i)	பல்கலைக்கழகத்தினால், பட்டப்பின்படிப்பு கற்கைகள் பீடத்தின் ஊடாக நடாத்தப்படும் பட்டங்கள் வழங்கப்படும் 05 கற்கை நெறிகளுக்குச், சுற்றறிக்கையின் படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லை.	தொடர்புடைய 05 கற்கை நெறிகளுக்கும் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புக் கற்கை நெறிகளுக்கு, தொடர்புடைய சுற்றறிக்கையின்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
		(ii)	சுயநிதிச் செயற்பாடுகளால் உருவாக்கப்படும் வருமானத்திலிருந்தே அந்த கற்கை நெறிகளுக்கான	UBLC அலகின் முகாமைத்துவப் பதவிக்கான ஊதியத்தைச் சுயநிதி வருமானங்களிலிருந்து செலுத்துவதற்கு	UBLC அலகால் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படாததால், சுயநிதி அலகாக UBLC அலகை வருமானம்

		நேரடி மற்றும் மறைமுகச் செலவுகளை ஏற்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் சுற்றறிக்கையை மீறி, திறந்த மற்றும் தொலைக் கல்வி மையத்தின் செயற்பாடுகளுக்குப் புறம்பாக தனி அலகாகப் பேணப்படும் பல்கலைக்கழகத்தின் வியாபாரத் தொடர்புகள் அலகின் (UBLC) முகாமைத்துவப் பதவிக்காக ரூபா 724,500 ஊதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது.	2024.09.03 ஆம் திகதியிட்ட 313 ஆம் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் 2024.12.19 ஆம் திகதியிட்ட 240 ஆம் நிதிக் குழுவின் மூலமாக அனுமதியைப் பெற்றுள்ளன.	ஈட்டக்கூடிய அலகாக மாற்றுவதுடன், பல்கலைக்கழகத்தில் உள்ள சுயநிதி அலகுகளின் சுயாதீனத்துவம் பாதுகாக்கப்படும் வகையில் வருமானங்களைப் பதிவுசெய்தலும் மற்றும் செலவுகளை மேற்கொள்வதும் செய்யப்பட வேண்டும்.
(உ)	2023 மே 09 ஆந் திகதிய 02/2023 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவு	பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கும், முகாமைத்துவத்திற்கு அறிக்கையொன்றை வழங்குவதற்கும், பண்ணையில் நடக்கும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் கணக்கு வைக்க பொருத்தமான செயல்முறை மற்றும் தனித்தனியான பதிவுகள் பராமரிக்கப்பட வேண்டும். இருப்பினும், அதன்படி செயற்படவில்லை.	தற்போது, சம்பந்தப்பட்ட அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,	பண்ணையில் நடக்கும் பரிவர்த்தனைகளை முறைப்படுத்துவதற்காக, அனைத்துப் பரிவர்த்தனைகளையும் கணக்கு வைக்க பொருத்தமான செயல்முறையும் மற்றும் தனித்தனியான பதிவுகளும் பராமரிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு மற்றும் செயற்பாடு அல்லாத விளைவுகள் ரூபா 4,213,346,404 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 505,333,576 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 3,708,012,828 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு STHRD செயற்திட்டத்திற்காக மானியங்களின் பெறுவனவு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

2.2 பிதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டில், செயற்பாட்டு மற்றும் செயற்பாடற்ற விளைவு 734 சதவீதத்தால் அதிகரிக்க, பிணைமுறி மீறலிலிருந்து அறவிடப்பட்ட ரூபா 14,344,442 மற்றும் STHRD திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 4,635,717,503 தொகையான மானியங்களும் தாக்கம் செலுத்தின.

(ஆ) மேலும், விநியோகங்கள் மற்றும் நுகர்வுச் செலவுகள் ரூபா 43,814,220 ஆல், அதாவது 34 வீதத்தாலும், ஏனைய செயல்பாட்டுச் செலவுகள் ரூபா 7,313,399 ஆல், அதாவது 11 சதவீதத்தாலும், மற்றும் மீண்டெழும் AHEAD செயற்திட்டச் செலவுகள் ரூபா 57,487,955 ஆல், அதாவது 99 வீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

2.3 விகிதப் பகுப்பாய்வு

விகிதம்	2024	2023	வேறுபாடு
நடைமுறை விகிதம் (நூற்றுக்கு)	70	83	13
நடைமுறை / விரைவு விகிதம் (நூற்றுக்கு)	62	74	12

நடைமுறை விகிதம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 13 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், திரவ/விரைவு விகிதம் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. அதன்படி, பல்கலைக்கழகம் கடந்த ஆண்டை விட செயல்பாட்டு மூலதனத்தில் ஒரு வீழ்ச்சியை அடைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், 2019 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழகத்தின் நடைமுறைச் சொத்துக்களின் அளவு நடைமுறைப் பொறுப்புகளை தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) பல்கலைக்கழகத்தின் கொள்கை மற்றும் நடைமுறைக் கோவை (Policy and Code of Practice) வழிகாட்டுதலின்படி, சம்பந்தப்பட்ட பாடத்திட்டங்கள் ஒவ்வோர் 05 வருடங்கள் கடப்பதற்கு முன்பாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். இருந்தபோதிலும், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் 06 கற்கை நெறிகளுக்கு அமைய, 06 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்குள்	திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் 06 கற்கை நெறிகளின் பாடத்திட்டங்களுக்கான சமயோஜித மாற்றங்களின் தற்போதைய நிலை குறித்து சம்பந்தப்பட்ட பீடங்களின் பீடாதிபதிகளிடம் வினவி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், பதில் கிடைத்தவுடன் தகவல்கள் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.	சம்பந்தப்பட்ட பாடத்திட்டங்கள் ஒவ்வோர் 05 வருடங்கள் கடப்பதற்கு முன்பாக மீளாய்வு செய்யப்பட்டு, தற்போதைய தொழிற் சந்தைக்கும் மற்றும் உலகமயமாக்கலுக்கும் ஏற்றவாறு பாடத்திட்டங்களை வகுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

	பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்படவில்லை.		
(ஆ)	2019/2020 கல்வியாண்டு முதல் 04 வருடப் பதிவுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகத்தின் 8 பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விட 1,079 மாணவர்கள் குறைவாகப் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக, பல்கலைக்கழகக் கல்வியை எதிர்பார்த்துக் காத்திருந்த மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.	பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பட்டப் படிப்புக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் மற்றும் வெற்றிடங்களை நிரப்பும் பணிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர் சேவைப் பிரிவு அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படும் மாணவர்களைப் பதிவுசெய்வது மற்றும் அது தொடர்பான பணிகளை மட்டுமே செய்கிறது என்றும், பதிவு செய்வது அல்லது செய்யாதிருப்பது என்பது சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் முடிவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவ்வப்போது மேல்முறையீட்டுச் சுற்றுகள் மூலம் ஒவ்வொரு கற்கை நெறிக்குமான மாணவர்களின் பெயர்ப் பட்டியல்கள் அனுப்பப்படுகின்றன என்றும், அனுப்பப்படும் பெயர்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் வேறு கற்கை நெறிகளுக்கு மாறுவதும் நிகழ்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.	இது தொடர்பாகப் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவிலும் கலந்துரையாடப்பட்டவாறு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடி, உரிய காலப்பகுதிக்குள் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையைச் சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றைத் தயாரிப்பதற்காக 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 2,440,300 செலவிடப்பட்டிருந்த போதிலும், 2025 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரித்து முடிப்பதற்குப் பொறுப்பான	சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட பின்னர், அது நடைமுறை வேலைகள் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு, மூலதனமாக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.	நிலையான சொத்துக்கள் பதிவேட்டைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக 2016, 2017, 2019 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு அமையச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இது தொடர்பாகப் பொறுப்பு சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களிடம் விளக்கங்கள் கோரப்பட

உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.		வேண்டும், மேலும் தங்கள் பொறுப்பை முறையாக நிறைவேற்றாத சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சபரகமுவ பல்கலைக்கழகத்திற்குப் பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான ஒப்பந்தத்தின்படி, 99 இடங்களை உள்ளடக்குவதற்கு 04 சேவைப் பிரிவுகளில் 6,541 பாதுகாப்புச் சுழற்சிகள் வழங்கப்பட வேண்டும். 2024 திசெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது, தேவையான அளவை விட 32 பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதிகமாகவும், மற்றைய உத்தியோகத்தர்கள் தேவையான அளவை விட 1,974 பேர் குறைவாகவும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. இதன்படி, தேவையான உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாததால், பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பைப் பேணுவது குறித்துப் போதுமான உறுதிப்பாட்டைப் பெற முடியவில்லை. மேலும், உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் வழங்கும்போது, கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வருகை மற்றும் வெளியேற்றப் பதிவுகள் அடிப்படையாகக் கொள்ளப்படவில்லை.	கைவிரல் அடையாள இயந்திரம் செயலிழந்துள்ளதால், அதனைப் பழுதுபார்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் , புதிய கைவிரல் அடையாள இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.	பல்கலைக்கழகத்திற்குப் பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான ஒப்பந்தத்தின்படி, இடங்களை உள்ளடக்குவதற்கு போதுமான பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி, பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு முறையாக உறுதிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் வழங்கும்போது, வருகை மற்றும் வெளியேற்றத்தை உறுதிப்படுத்த முறையான செயன்முறை பயன்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	விவசாய விஞ்ஞானப் பீடத்தின் ஏற்றுமதி விவசாயக் கற்கைகள்	விவசாய விஞ்ஞானப் பீடத்தின் பண்ணை	முன் கண்காணிப்பு நடவடிக்கையாகப்

	பிரிவில் இரண்டாம் ஆண்டு முதல் அரையாண்டின் பண்ணை நடைமுறைக் கற்கை நெறியைப் பயிலும் 07 மாணவர்களுக்கு, 2024 ஒக்தோபர் 31 ஆம் திகதி காலாவதியான 07 டோஸ் டெட்டனஸ் டொக்சாய்ட் (Tetanus Toxoid) தடுப்பூசிகள் 2024 திசெம்பர் 17 ஆம் திகதி பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தினுள் வழங்கப்பட்டிருந்தன. அதன்படி, மருத்துவ நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் முறையான தொழில்முறை அக்கறையின்றி (Professional due care) செயற்பட்டிருந்தனர் என்பதும், விவசாய விஞ்ஞானப் பீடத்தின் பண்ணை நடைமுறைக் கற்கை நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு டெட்டனஸ் டொக்சாய்ட் (Tetanus Toxoid) தடுப்பூசி போடுவதற்கான முறையான வழிகாட்டுதல், சுற்றறிக்கை அல்லது பீடச் சபை தீர்மானம் எதுவும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.	நடைமுறைக் கற்கை நெறியின் போது பல்வேறு உபகரணங்கள் மற்றும் விலங்குகளால் சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால், நீண்ட காலமாகவே டெட்டனஸ் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது என்றும், கடந்த பண்ணை நடைமுறைக் கற்கை நெறி ஆரம்பிக்கும் போது பல்கலைக்கழக வைத்தியரிடம் அனுமதி கோரப்பட்டது என்றும், அதற்கமையவே தடுப்பூசிகள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.	பேணப்பட வேண்டிய “தடுப்பூசி நகர்வுப் பதிவேடு (Vaccine Movement Register)” செயன்முறையைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரையாண்டின் பண்ணை நடைமுறைக் கற்கை நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு டெட்டனஸ் டொக்சாய்ட் (Tetanus Toxoid) தடுப்பூசி போடுவதற்காக ஒரு முறையான வழிகாட்டுதல், உள்ளகச் சுற்றறிக்கை அல்லது பீடச் சபை தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், விவசாய விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம், புவிவியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகிய பீடங்களின் பட்டப்படிப்புகளுக்காக, 12 சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விட 115 மாணவர்கள் அதிகமாகப் பல்கலைக்கழகத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவ்வப்போது ஒவ்வொரு கற்கை நெறிக்குமான பெயர்ப் பட்டியல்கள் அனுப்பப்படுகின்றன என்றும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படும் மாணவர்களைப் பதிவுசெய்வது பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், அந்தந்த கல்வி வருடங்களின் முதல் அரையாண்டின் கல்விப் பணிகள் முடிந்த பின்னரும் மாணவர் பதிவுகள் நடைபெறுவதாகவும், அவ்வாறு பதிவுசெய்யும்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விட அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு சேர்ப்பதற்கான வாய்ப்பு பல்கலைக்கழகத்திற்கு இருந்தால், சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்குத் தெரியப்படுத்தி, அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை

		மாணவர்கள் அடுத்த கல்வி வருடத்திற்கு வழிநடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தப்பட்ட மாணவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் இடம்பெறுகின்றது எனவும், இவ்வாறு செய்யும்போது அங்கீகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை மீறப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.	எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	உயர்கல்வி மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் (AHEAD) செயற்திட்டத்தின் மூலம், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வணிகமயமாக்கலை (Research, Innovation & Commercialization - RIC) ஊக்குவிப்பதற்காக 2018-2024 காலப்பகுதியில் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட 5 மானியங்களில், 02 மானியங்கள் தொடர்பான ரூபா 85,000,000 இற்குரிய எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்திருக்கவில்லை. மேலும், வணிகமயமாக்கப்பட்ட இந்த 05 தயாரிப்புகளுக்கான பல்கலைக்கழகத்திற்குச் சேர வேண்டிய காப்புரிமை/அனுமதிப்பத்திர தொகையை பெற்றுக்கொள்ள 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த காப்புரிமை தொகையை அறவிடுவது குறித்து பின்தொடர்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாகக் கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.	RIC-07 ஆராய்ச்சிக் குழுக்களிடம் மின்னஞ்சல் மூலம் விளக்கங்கள் கோரப்பட்ட போதும், பதில்கள் கிடைக்கவில்லை. RIC-24 செயற்திட்டத்தின் கீழ், SULECO Pvt. Ltd மற்றும் பண்டாரவளை மாநகர சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் வணிகமயமாக்க முயற்சி எடுக்கப்பட்ட போதும், நிறுவன வரையறைகள் காரணமாக அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்றும், இருப்பினும் AHEAD KPI க்கள் (முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.	RIC இன் கீழ் வழங்கப்படும் மானியங்களின் நோக்கம் UBLC அலகின் மூலம் வணிகமயமாக்குவதே ஆகும். ஆனால், RIC 07 மற்றும் RIC 24 மூலம் எதிர்பார்க்கப்பட்ட வணிகமயமாக்கல் இலக்கு அடையப்படாததால், இது குறித்துப் பின்தொடர்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வணிகமயமாக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான ஒப்பந்தம் செய்யப்பட்ட காப்புரிமை வருமானம்/உரிமத் தொகையை ஒப்பந்தத்தின்படி பல்கலைக்கழகத்திற்குப் பெற்றுக்கொள்ளத் தேவையான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் 6 நிதியங்களில் நிலவும் மொத்தத் தொகையான ரூபா 5,259,907 இற்குரிய மீதியானது, இரண்டு வருடங்களுக்கும் மேலாக உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை.	வெளிநாட்டு மாணவர்களின் புலமைப்பரிசில் நிதிகள் (Foreign student's scholarship funds) தொடர்பில், மாணவர் இன்னும் சம்பந்தப்பட்ட பீடத்தில் கல்வி கற்பதால், அந்தப் பணத்தை நிதிக்குத் திருப்பி அனுப்பவோ அல்லது அரசாங்க வருமானமாக எடுக்கவோ முடியாது என்பதால், இவ்வாறான நிலை காணப்படுகிறது எனவும், கிராமியத் தாங்கிகளின் எல்லைகளை நிர்ணயித்தல் (Demarketing boundaries of rural tanks) திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 240,000 தொகை ஆதிவாசி மக்கள் மையத்தினால் நடாத்தப்படும் ஒரு கற்கை நெறிக்கானது என்பதால், அதற்கமைய அதனைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஏனைய நிதிகளின் செயற்பாடுகள் குறித்து வினவி சம்பந்தப்பட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.	இந்த நிதியங்கள் நியதிச்சட்டமற்ற நிதியங்களாக இருந்தால், அந்த நிதியங்கள் தொடர்பாகத் திறைசேரியினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி (STHRD) செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் பேரில், ஒரு நாளைக்கு 200 - 250 கிலோகிராம் கழிவு உணவைப் பயன்படுத்தி உக்கலெருவை உற்பத்தி செய்யக்கூடிய ஓர் இயந்திரம் ரூபா 12,400,000 செலவில் 2024 ஏப்ரல் மாதத்தில் சம்பத் பியச வளாகத்தில் நிறுவப்பட்டது.	ஒப்பந்தக்காரர்களால் சம்பத் பியச வளாகத்தில் அமைந்துள்ள உக்கலெரு இயந்திரத்தை இயக்குவது தொடர்பான பயிற்சி அமர்வுகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன என்றும், இந்த இயந்திரத்தின் மூலம் சிறந்த விளைவுகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு, அதாவது தடையற்ற செயல்திறன் மிக்க செயன்முறையை	பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு நாளைக்கு வெளியேற்றப்படும் கழிவு உணவில் சுமார் 50 சதவீதத்தைப் பயன்படுத்தி உக்கலெருவை உற்பத்தி செய்யக்கூடிய வகையில் நிறுவப்பட்ட இந்த இயந்திரத்தை, உடனடியாக உக்கலெரு உற்பத்திச் செயன்முறைக்குப் பயன்படுத்தி, பல்கலைக்கழகத்தின் கழிவு

	இருப்பினும், இந்த இயந்திரத்தை இயக்கக்கூடிய தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இல்லாததால், 2025 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் அது செயலிழந்த நிலையிலேயே இருந்தது. இதன் காரணமாக, பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு நாளைக்கு சுமார் 437 கிலோகிராம் கழிவு உணவு வெளியேற்றப்பட்ட போதிலும், அந்தக் கழிவுகளைப் பயன்படுத்தி கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளத் தவறியுள்ளது.	உறுதிப்படுத்துவதற்காக, தொழில்முறை குழுக்களுடன் இணைந்து உக்கலெரு இயந்திரத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இதற்குத் தேவையான ஊழியர்களின் பற்றாக்குறை பல்கலைக்கழகத்தில் நிலவுவதால், இதற்காக பொருத்தமான மற்றும் தொழில்நுட்ப அறிவில் பூரணமான ஊழியர்களைப் பல்கலைக்கழகத்திற்கு நியமிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.	முகாமைத்துவச் செயன்முறையை ஒழுங்குபடுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	உயர்கல்வி மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் (AHEAD) செயற்திட்டத்தின் கீழ் பண்ணைக்கு வழங்கப்பட்ட ரூபா 95,000 பெறுமதியான பால் கறக்கும் இயந்திரம் 02 வருட காலமாகவும், ரூபா 1,090,500 பெறுமதியான புல் துண்டாக்கும் இயந்திரம் 03 வருட காலமாகவும் பழுதுபார்க்கப்படாமல் செயலிழந்த நிலையில் இருந்தன. மேலும், பெறுமதி குறிப்பிடப்படாத Milking Machine Sezer இயந்திரம், மின் பிறப்பாக்கி (Generator) மற்றும் ஆழ்துளைக் கிணறு (Tube Well) ஆகியவை சுமார் இரண்டு வருட காலமாகச் செயலிழந்து காணப்பட்டன.	பால் கறக்கும் இயந்திரம் மற்றும் புல் துண்டாக்கும் இயந்திரம் ஆகியவை பழுதுபார்க்கப்பட்டு வருவதாகவும், அதன் பிறகு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. Milking Machine-Milkkary இயந்திரங்கள் 2 இந்த உபகரணங்களைப் பழுதுபார்க்கக்கூடிய கம்பனிக்கு அனுப்பி, பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மின் பிறப்பாக்கி Generator - பழுதுபார்க்கும் பணிகளுக்காகப் பொருத்தமான நிறுவனத்தைத் தொடர்புகொள்வதற்காகப் பொது நிர்வாகப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆழ்துளைக் கிணறுகள் (Tube Wells): ஆழ்துளைக் கிணறுகளுக்கான பிரதான மின்சாரம் ஜெனரேட்டருடன்	உபகரணங்களை விரைவாகப் பழுதுபார்த்து, அவற்றை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இணைக்கப்பட்டுள்ள சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ளதால், ஜெனரேட்டரைப் பழுதுபார்த்த பின்னரே ஆழ்துளைக் கிணறுகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ஆரம்பப் பரிசோதனைப் பணிகளை மேற்கொள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையைத் தொடர்புகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) உயர்கல்வி மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் (AHEAD) செயற்திட்டத்தின் மூலம் 2022 செப்தெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,000,000 பெறுமதியான தேயிலை உருட்டல் இயந்திரம் (Tea Roller), தேயிலை உலர்த்தி (Tea Dryer) மற்றும் உருண்டை உடைப்பான் (Roll Breaker) ஆகிய உபகரணங்கள், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாமல், கணக்காய்வு செய்யப்பட்ட தினமான 2025 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் செயலிழந்து காணப்பட்டன. அதேபோல், பிரயோக விஞ்ஞானப் பீடத்திற்காக 2019 ஒக்தோபரில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,133,750 பெறுமதியான NUVE வகையைச் சேர்ந்த குளிரூட்டி (Freezer), அதற்குப் பொருத்தமான காற்றுக் குளிரூட்டி வசதியுடன் கூடிய இடத்தில் நிறுவப்படாததன் காரணமாக, 2023 ஜூலை 01 ஆம் திகதி முதல் கணக்காய்வு செய்யப்பட்ட தினமான 2025 ஜூன் 30 ஆம் திகதி வரையிலும் செயலிழந்து காணப்பட்டது.

அந்த செயற்திட்டத்தின் மூலம் தேயிலை உருட்டல் இயந்திரம், தேயிலை உலர்த்தி மற்றும் உருண்டை உடைப்பான் ஆகிய உபகரணங்கள், முங்கஸ்தென்ன பிரதேசத்தில் உள்ள ஆய்வகங்கள் புதிய விவசாய பீடக் கட்டிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட பின் காலியாகும் ஆய்வகத்தில் தேயிலைச் செயலாக்கப் பிரிவாக (Tea Processing Unit) நிறுவப்படலாம் என்ற எதிர்பார்ப்புடன் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், புதிய பீடக் கட்டுமானத்தில் தாமதம் ஏற்பட்டதால், அந்தப் பணியும் தாமதமானது. இதற்காக மூன்று கட்ட மின்சாரத்தைப் பெற்றுக்கொடுக்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பொது நிர்வாகப் பிரிவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கட்டிட வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு காணி மற்றும் கட்டிடக் குழுவிடம் (LBMC) கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதிக பெறுமதி கொண்ட இத்தகைய சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட சொத்துக்களை நிறுவத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதா என்பதையும், சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது அந்தச் சொத்துக்களின் உண்மைத் தேவையை ஆராய்ந்து சிறந்த முடிவுகளை எடுப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், இவ்வாறு செயலிழந்துள்ள சொத்துக்களை விரைவாகத் தமது இலக்குகளுக்காகப் பயன்படுத்துவதற்குரிய வழிமுறைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்காக 177 கல்வி சாரா ஊழியர்களுக்கான 20 வகையான சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்காக, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமிக்காமல் விலைமனுக் கோரப்பட்டு, 2023 நவம்பர் 22 ஆம் திகதி விலைமனுக் கோரல் ஆவணங்கள் திறக்கப்பட்டுள்ளன. இருப்பினும், விலைமனுக்கள் திறக்கப்பட்ட தினத்திலிருந்து அதனை மதிப்பீடு செய்வதற்கு 102 நாட்கள் கால அவகாசம் எடுத்ததன் காரணமாக, செல்லுபடியாகும் காலப்பகுதிக்குள் விலைமனுக் கோரலை வழங்குவதற்கு முடியவில்லை. விலைக்கேள்வி ஆவணங்கள் திறக்கப்பட்ட பின்னரே தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டதன் காரணமாக, பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(அ)(ii) பிரிவின்படி, விவரக்குறிப்புகளை மதிப்பிடும் பொறுப்பு நிறைவேற்றப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கான உத்தியோகத்தர்களுக்குச் சேர வேண்டிய ஆயத்த ஆடைகளை வழங்குவதையும் 2025 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் செய்ய முடியவில்லை.	2024 ஆம் ஆண்டிற்கான சீருடைகளை வழங்குவதற்காக, தாபனக் கிளையினால் 2023.10.10 ஆம் திகதி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும், 2023.11.07 ஆம் திகதி விலைமனுக் கோரப்பட்டு, 2023.11.22 ஆம் திகதி விலைமனுக்கள் திறக்கப்பட்டு, 2023.12.01 ஆம் திகதி மதிப்பீட்டுப் பணிகளுக்காகத் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை 2024.02.24 ஆம் திகதி பெறப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மிக நீண்ட காலமாகவே சீருடை கொள்வனவு என்பது உரிய நிறம் அல்லது துணி வகையைக் குறிப்பிட்டுப் பிரகடனப்படுத்தாமல் நடைபெற்று வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா 10 மில்லியனுக்கு மிகாத நிலையான விவரக்குறிப்புகளைக் கொண்ட பொருட்களைக் கொள்வனவு செய்யும்போதும், ஒரு முற்கூட்டிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்து, அதன் பரிந்துரைகளின் பேரில் கொள்வனவுப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	பல்கலைக்கழகத்தினால் சீருடைகள் கொள்வனவு செய்வதற்காகப் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுப் பணிகளில் ஒழுங்கீனம் அவதானிக்கப்பட்டதால், அந்த நிலைமையைத் தவிர்க்கக்கூடிய வகையில் பெறுகை நடைமுறையை முறைப்படுத்தி, சரியான கால அட்டவணைக்குள் சீருடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பல்கலைக்கழகத்தின் 06 பதவிகளைச் சேர்ந்த 54 பெண் உத்தியோகத்தர்களுக்கான 2022 ஆம் ஆண்டிற்குரிய சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்	2023 ஆம் ஆண்டிற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட சீருடைகளை (சாரிகள் மட்டும்) பெற்றுக்கொள்வதைச் சீருடைப் பயனாளிகளின் தொழிற்சங்கங்கள்	பல்கலைக்கழகத்தினால் சீருடைகள் கொள்வனவு செய்வதற்காகப் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட பெறுகைப் பணிகளில் ஒழுங்கீனம்

	கோரலில் இருந்த குறைபாடுகள் காரணமாக, 06 சந்தர்ப்பங்களில் திரும்பத் திரும்ப விலைமனுக் கோரப்பட்டு, 2023 திசெம்பர் 06 ஆம் திகதி ரூபா 576,150 பெறுமதியான 138 சாரிகள் மற்றும் சாரிக்கான இரவிக்கை துணிகள் ஒரு விநியோகஸ்தரிடமிருந்து பெறப்பட்டன. இருப்பினும், இந்தச் சீருடைகளைச் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் நிராகரித்ததன் காரணமாக, 2025 ஜனவரி 20 ஆம் திகதி விநியோகஸ்தரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.	எழுத்துமூலம் நிராகரித்ததன் காரணமாக, உபவேந்தரின் அனுமதியுடன் 2025 ஜனவரி 20 ஆம் திகதி சம்பந்தப்பட்ட விநியோகஸ்தரிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கை இலக்கம் 15/1989 இற்கு அமைய, தற்போதைய சீருடை கொள்வனவில் துணி வகை மற்றும் நிறம் குறித்துப் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளதால், பல்கலைக்கழகத்தின் பிரதம நிதி உத்தியோகத்தர், சிரேஷ்ட உதவி நிதி உத்தியோகத்தர் (வழங்கல்), உதவிப் பதிவாளர் (கல்வி சாரா நிறுவனங்கள்) மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடலை நடாத்தி, சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்கான சரியான விவரக்குறிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக, விநியோகப் பிரிவினால் உதவிப் பதிவாளர் (கல்வி சாரா நிறுவனங்கள்) அவர்களுக்கு எழுத்துமூல அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.	அவதானிக்கப்பட்டதால், அந்த நிலைமையைத் தவிர்க்கக்கூடிய வகையில் பெறுகை நடைமுறையை முறைப்படுத்தி, சரியான கால அட்டவணைக்குள் சீருடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பல்கலைக்கழகத்தின் 2024/2025 ஆம் ஆண்டிற்கான துப்பரவு, சுகாதார மற்றும் தோட்டப் பராமரிப்புச் சேவைக்கான ஒப்பந்தம், 165 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தும் அடிப்படையில் ரூபா 116,504,645 இற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதேவேளை, 2023/2024 ஆம் ஆண்டில் அதே ஒப்பந்தம் 158 ஊழியர்களை ஈடுபடுத்தும் அடிப்படையில் ரூபா 64,134,867 இற்கு	காலப்போக்கில் ஏற்பட்ட செலவு அதிகரிப்பானது மதிப்பீட்டில் கவனத்தில் எடுக்கப்பட்டதால், கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை உயர்வுக்கு அதுவே காரணமாகும். அத்துடன், விலைமனுவை மதிப்பீடு செய்யும்போது மொத்த விலைமனு விலையே கவனத்தில் எடுக்கப்பட்டது, உருப்படிகளின் ரீதியில் ஒப்பிட்டுப் பார்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	துப்பரவு, சுகாதார மற்றும் தோட்டப் பராமரிப்புச் சேவைக்காக விலைமனுக் கோரும்போது, வருடாந்தம் ஒரே மாதிரியான செயன்முறையைப் பயன்படுத்துவதும், விலைமனுக் கோருவதற்கு முன்னர் தேவைகளைக் குறிப்பிட்டு ஆரம்ப மதிப்பீடு ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதும், அசாதாரண

வேறொரு தனியார் நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் போது 2023/2024 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 7 ஊழியர்கள் மட்டுமே அதிகரித்துள்ள நிலையிலும், ஒரு ஆண் மற்றும் பெண் ஊழியருக்கான செலவு முறையே ரூபா 100 மற்றும் ரூபா 200 மட்டுமே அதிகரித்துள்ள நிலையிலும், அதிகரிக்கும் பணவீக்க விகிதம் வீழ்ச்சியடையும் சூழ்நிலையில் ஒரு 81 வீதத்தின் அசாதாரண விலை மாற்றம் குறித்துக் கொள்வனவுக் குழுவினதும் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை. மேலும், ஒப்பந்தக் காலம் 2025 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதிலும், மீண்டும் விலைமனுக் கோரி ஒப்பந்தம் வழங்கப்படுவதற்குப் பதிலாக, இந்த நிறுவனத்தின் ஒப்பந்தக் காலம் 2025 ஜூலை 01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.	மேலும், துப்பரவு ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சச் சம்பளம் அதிகரித்தமையும் சம்பந்தப்பட்ட ஆண்டிற்குக் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளதால், ஊழியக் கிரயம் 2024/2025 இற்கு அதிகரித்துள்ளது. அதேபோல், துப்பரவு சேவையினால் சேகரிக்கப்படும் உக்காத கழிவுகளை முறையாக வெளியேற்றுவது கட்டாயமானது என்றும், ஒப்பந்த நிபந்தனைகளின்படி பல்கலைக்கழகம் விலைமனுதாரருக்கு அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கழிவு மறுசுழற்சி தொடர்பாகப் பல்கலைக்கழகத்தில் எழுந்த சிக்கல்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட அறிவித்தலின்படி, பல்கலைக்கழக வளாகத்திற்கு வெளியே சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் சட்டரீதியான வழிமுறைகளைப் பின்பற்றி கழிவுகளை அகற்ற வேண்டும் என்றும், அதற்காக அதிக செலவு ஏற்படும் என்றும், அந்தச் செலவும் விலைமனு விலையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.	விலை மாற்றங்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் அது குறித்துப் பொறுப்பான தரப்பினரின் கவனத்தை ஈர்ப்பதும் செய்யப்பட வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	1996 மே 07 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 679 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி திருத்தப்பட்ட பாதுகாப்புப்	பாதுகாப்புப் பரிசோதகர் (II) தரத்திலுள்ள ஆண் பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஒரு குழு தற்போது	விசாரணைப் பணிகளை துரிதமாக நிறைவு செய்து, பெறப்பட்ட பரிந்துரைகளுக்கு அமையச் செயற்பட வேண்டும். அத்துடன், பல்கலைக்கழகத்திற்கு

	பரிசோதகர் II தரத்திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில், தகுதி I (ஆ) II இன் கீழ், விண்ணப்பதாரருக்குப் போலிஸ் சேவை, இராணுவ சேவை, பல்கலைக்கழகப் பாதுகாப்பு சேவை அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புச் சேவை நிறுவனமொன்றில் ஐந்து (5) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலம் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், ஒரு தனியார் பாதுகாப்புச் சேவை நிறுவனத்தில் 2002 மே 06 ஆம் திகதி முதல் 2008 ஒக்தோபர் 04 ஆம் திகதி வரை முழுநேரச் சேவை செய்ததாகக் போலியான சான்றிதழைச் சமர்ப்பித்த ஒருவர், பாதுகாப்புப் பரிசோதகர் (II) தரத்திலுள்ள ஆண் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.	நியமிக்கப்பட்டுள்ளது. அந்த விசாரணை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.	ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது உரிய ஒழுங்குவிதிகளுக்கு அமையச் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானப் பீடத்தைச் சேர்ந்த பண்ணையின் முகாமையாளர் பதவி 2022 நவம்பர் 01 ஆம் திகதி முதல் வெற்றிடமாக இருப்பதானது, அந்த நிறுவனத்தின் கண்காணிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் நேரடியாகப் பாதிக்கிறது என்பது அவதானிக்கப்பட்டது.	பண்ணை முகாமையாளரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தேவையான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.	பண்ணை முகாமையாளர் இல்லாததால் ஏற்படும் விளைவுகள் குறித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்குத் தெரியப்படுத்தி, இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டும்.

3.7 வாகனக் கட்டமைப்பு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புகள்	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரைகள்**
(அ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் 2.1.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒரு	இது தொடர்பாக 2024.12.30 ஆம் திகதி நடைபெற்ற 313 ஆவது பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், தேவையான மேலதிக	தாபனவிதிக் கோவையின் விதிகளின் பிரகாரம், பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் பதிவாளரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும்.

மோட்டார் வாகனம் அந்த வாகனம் சொந்தமான பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் பதவிப் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 13 வாகனங்கள் பல்கலைக்கழகப் பதிவாளரின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ) 2020 ஒக்டோபர் 02 ஆம் திகதியிடப்பட்ட கொம்ப்ரோலர் நாயகத்தின் இலக்கம் 05/2020 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், சபரகமுவ பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படாத ரூபா 500,000 பெறுமதியான, இயங்கும் நிலையில் இல்லாத நோயாளர் காவு வண்டியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பதற்கு மற்றும் ரூபா 1,500,000 பெறுமதியான மலம் அகற்றும் பவுஸரை பழுதுபார்க்கப்பட்டு பாவனைக்குக் கொண்டுவர உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இந்த வாகனங்களில், நோயாளர் காவு வண்டியை அகற்றுவதற்காக உபவேந்தரால் நியமிக்கப்பட்ட விசேட குழுவிடம் சம்பந்தப்பட்ட ஆவணக் கோப்பு 2024.09.24 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிலவும் நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில், இலக்கம் SG RA 0757 கொண்ட மலம் அகற்றும் பவுஸர் வாகனத்தை பழுதுபார்க்கவோ அல்லது அகற்றவோ எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	இந்த இரண்டு வாகனங்களையும் உள்ளடங்கலாக, இயங்கும் நிலையில் இல்லாத வாகனங்கள் தொடர்பாகச் சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2021 நவம்பர் 16 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச்	2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு, 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி நடைபெற்ற விசேட 242 ஆவது நிதிக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு, 2025 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி நடைபெறவிருந்த முகாமைத்துவச் சபைக்கு சமர்ப்பிக்க அறிவிக்கப்பட்டிருந்த போதும், புதிய முகாமைத்துவச் சபை	நிதிக்கூற்றுக்களை உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பது ஒரு சட்டரீதியான தேவையாகும். எனவே, எதிர்காலத்தில் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை

சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 நாட்கள் தாமதத்துடன் 2025 மார்ச் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	உறுப்பினர்கள் நிதிக்கூற்றுக்களைப் பரிசீலனை செய்வதற்கு இரண்டு வாரங்கள் கால அவகாசம் தேவை என எழுத்துமூலம் தெரிவித்திருந்தனர். அதற்கமைய, மார்ச் 17 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவச் சபையினால் சுட்டிக்காட்டப்பட்ட எழுத்து மற்றும் இலக்கண ரீதியான குறைபாடுகளையும் திருத்தம் செய்து, 2025 மார்ச் 28 ஆம் திகதி கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	எடுக்கப்பட வேண்டும்.

4.2 ஆண்டறிக்கை

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
பல்கலைக்கழகத்தினால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வரைபு வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்பு வரைபடத்திற்கும் மற்றும் 2024-2028 ஆம் ஆண்டுகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்பு வரைபடத்திற்கும் இடையேயான பதவிகளின் படிநிலை ஓட்டத்தில் வேறுபாடுகள் காணப்படுவதாகக் கணக்காய்வுக்கு அவதானிக்கப்பட்டது.	மூலோபாயத் திட்டமிடல் குழுவின் தலைவர் இது தொடர்பாகப் பதிவாளருடன் கலந்துரையாடி, மிகவும் பொருத்தமான நிறுவனத் திட்டமொன்றை வடிவமைத்துள்ளார் என்றும், 2025 ஜுலை மாதத்தில் நடைபெறவிருக்கும் முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று, அதனை எதிர்காலத்தில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனும் மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களுடனும் கலந்துரையாடி, பல்கலைக்கழகத்திற்காக ஒரேயொரு நிறுவன கட்டமைப்பு வரைபடத்தைத் தயாரிக்க வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்புகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
உயர்கல்வி மற்றும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் (AHEAD) செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,950,258 தொகையான நிதிப்பங்களிப்புடன் 2021 ஆம் ஆண்டில் பிரயோக விஞ்ஞானப்	இந்த இயந்திரம் நிறுவப்பட்டதற்கான காரணம், ஆய்வகங்களிலிருந்து அகற்றப்படும் நச்சுத்தன்மையுள்ள (Toxic) கழிவுகள் சாதாரணக் கழிவு	மாணவர்கள், விரிவுரையாளர்கள் உட்படப் பலரும் நடமாடும் பகுதியாக இருப்பதால், இந்த இரசாயனக் கழிவுகளை எரிக்கும் இயந்திரம்

பீடத்தில் நிறுவப்பட்ட இரசாயனக் கழிவுகளை எரிக்கும் இயந்திரத்தின் புகைபோக்கியின் உயரம் கட்டிடங்களின் சாளர மட்டத்திற்குச் சமமான மட்டத்தில் அமைக்கப்பட்டதன் காரணமாக, இரசாயனக் கழிவுகளை எரிக்கும்போது வெளியேறும் புகையினால் ஏற்படும் தடையைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தப் பணிகள், கணக்காய்வு செய்யப்பட்ட தினமான 2025 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் செய்யப்படவில்லை. மேலும், இந்த இயந்திரத்திலிருந்து வெளியேறும் இரசாயனப் பொருட்கள் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் என்பதால், இதனை பிரயோக விஞ்ஞானப் பீடத்திற்கு அண்மையாக நிறுவியுள்ளமையும் கணக்காய்வுக்கு சிக்கலாக இருந்தது.

சேகரிப்பு முறைமையுடன் கலப்பதைத் தவிர்ப்பதற்காகும் என்றும், பல சந்தர்ப்பங்களில் ஆய்வகத்திற்குப் புறம்பான வேறு கழிவுகளை (ஆய்வுகூடத்தில் இல்லாத) இட்டதன் காரணமாகவும், முழுமையாக எரியூட்டுவதற்கு முன்னரே இயந்திரத்தை நிறுத்தியதன் காரணமாகவும் முழுமையாக எரியூட்டப்படாமல் புகை வெளியேறியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வகங்களிலிருந்து முறையாக அகற்றப்படும் கழிவுகளை சரியாகப் பொதி செய்ய வேண்டும் என்றும், அவற்றை விரைவாக வெளியேற்ற வேண்டும் என்றும், இதற்குத் தீர்வாக மிக உயர்ந்த தரமான எரிப்பின் மூலம் சுற்றாடல் பாதிப்பைக் குறைப்பதற்காகவே இந்த இயந்திரம் பீட வளாகத்திற்கு அண்மையில் நிறுவப்பட்டுள்ளது என்றும், பீடத்தில் கற்கும் மாணவர்களுக்கும் அதன் கழிவு முகாமைத்துவத்தை உயர்தரத்துடன் பேணுவதை நடைமுறையில் அவதானிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்பாக ஒரு ஒழுங்குபடுத்தும் உத்தியோகத்தர்யிடம் பரிந்துரைகளைப் பெற்று, அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் உரிய தீர்மானங்களை எடுக்க வேண்டும்.